தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.09.2026

## முன்னிலை

## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

### வழக்கு எண்கள். SA 7440/F/2023 & SA 7958/F/2023

திரு.ச.ராஜப்பன், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

******

## இறுதிஆணை

இவ்வாணையம் 21.07.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திருமதி.S.கனகவள்ளி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் ஆஜராகி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தில், மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் ஊராட்சி நிர்வாகம் மூலமாக மனுதாரர் திரு.ச.ராஜப்பன் என்பவர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு வருகை புரிந்து வட்டார வளர்ச்சி அலுவலரிடம் தகவல் பெற்றுக்கொண்டதாகவும் ஆவணங்களை பார்வையிட்டு தகவல்கள் பெற்றுக்கொண்டதாகவும், முதல் மேல்முறையீட்டு இவ்வலுவலகத்தில் பெறப்பட்டதாக இருக்கை எழுத்தர் ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், தான் வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிந்த காலத்தில் பத்து ரூபாய் இயக்கம் மற்றும பலர் என்னெற்ற தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் கோரிய அனைத்து கடிதங்களுக்கும் மேல்முறையீடு செல்லாதவாறு உரிய தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், தான் 31.05.2025-ல் பணிஓய்வு பெற்றுள்ளதாகவும், தற்போது இருசக்கரவாகனத்தின் கீழ் விழுந்து காலில் அடிபட்டுள்ளதால் தன்னால் நேரில் ஆஜராக இயலவில்லை என்று

தெரிவித்த, அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தினை தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்று, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 7440/F/2023 & SA 7958/F/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (07.02.2023 தேதிய)**
**துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊ),**
**வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியம்,**
**கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

**<u>மனுதாரர்</u>**

திரு.ச.ராஜப்பன்,
2/105, கங்கசந்திரம்,
குருபரபள்ளி அஞ்சல்,
கிருஷ்ணகிரி மாவட்டம்-635 115.

**<u>நகல்</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).

Copy to: File NS/PA-